REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை: ஆனி 8உ சனி (22—6—57) ★ ★ வெளியூர்: ஆனி 9உ ஞாயிறு (23—6—57) [இதழ் 7

உணவுப் பொருள்கள் முடக்கப்படுவதைத் தடுக்க நடவடிக்கைகள்

சென்னை, ஜுன் 21—

வியாபாரிகளும், மற்றவர்களும் பெரும் அளவில் உணவுப் பொருள்களை முடக்கி வைப்பதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்று சென்னை மாநில சர்க்கார் தற்போது யோசித்துக் கொண்டிருக்கிறதாம்.

அத்தகு நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு, மாநில சர்க்கார், சமீபத்திய அத்தியாவசியப் பொருள் சட்டம் திருத்தப்பட்டிருப்பதின் மூலம் அதிகாரம் பெற்றிருக்கின்றனர் என்பது தெரிந்ததே !

கம்பெனிகள் அரசியல் கட்சிகளுக்கு நிதி வழங்குவது:

'முளைவிடும் ஜனநாயகத்துக்கு பேரபாயமாகும்'

'சுயநலத்திற்காகவே டாடா கம்பெனி காங்கிரசிற்கு பணம்தர விரும்புகிறது'

'பணமூட்டைகளின் செல்வாக்கால் ஜனநாயகம் சீரழியும்'

'பாராளுமன்றம் இந்த வரலாற்று உண்மையை உணரவேண்டும்'

பம்பாய் உயர் நீதிமன்ற நீதிபதிகள் கருத்து

பம்பாய், ஜுன் 21—

"இந்த நிறுவனத்தின் பாதுகாப்பு, உறுதி, எதிர்கால வளர்ச்சி, இலாபம் இவை எல்லாம் காங்கிரஸ் சர்க்கார் தொடர்ந்து நீடித்து பதவியிலிருப்பதைப் பொறுத்திருக்கிறது என்று அந்த நிறுவனம் கருதுகிறது. எனவே, அந்த நிறுவனம், காங்கிரஸ் சர்க்காரை நீடித்திருக்கச் செய்யவேண்டியதாகிறது; இதுதான் அந்த நிறுவனம், அரசியல் கட்சிகளுக்கு நிதி வழங்கவேண்டும் என்ற முடிவை மேற்கொள்ளச் செய்தது என்று கருதுகிறோம்.

"இந்தியாபோன்று இப்போதுதான் ஜனநாயகம் முளைவிடும் இடங்களில், நிறுவனங்கள், அரசியல் கட்சிகளுக்கு நிதி வழங்குவதில் அடங்கிக் கிடக்கும் பேராபத்தினை பாராளுமன்றம் உணரவேண்டும் என்றும் சுட்டிக்காட்ட விழைகிறோம்"

என்று, டாடா இரும்பு - உருக்கு கம்பெனியார் அரசியல் கட்சிகளுக்கு நிதி வழங்குவதை அனுமதித்து தீர்ப்பு வழங்குகையில் பம்பாய் உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி எம். சி. சக்லா, மற்றும் நீதிபதி எஸ். டி. தேசாய் ஆகியோர் குறிப்பிட்டிருக்கின்றனர்.

டாடா கம்பெனியார் அது போல நிதி வழங்குவதை கீழ் நீதிமன்ற நீதிபதி அனுமதித்திருந்தார், கம்பெனியின் 'அறிக்கை'யைத் திருத்திக்கொள்வதின் மூலம்.

இதற்கு எதிராக, கம்பெனியின் பங்குதாரர் மூவர் உயர்நீதிமன்றத்தில் அப்பீல் செய்தனர்.

இந்த அப்பீலை நிராகரித்துத் தீர்ப்பு வழங்குகையிலேயே அந்த நீதிபதிகள் இருவரும் மேற்கண்டவாறு கூறிவிட்டு மேலும் கூறுவதாவது :—

"இந்த அப்பீலை நிராகரிப்பதில் நாங்கள் மிகுந்த மனவேதனை அடைகிறோம்; கம்பெனியை, அரசியல் கட்சிகளுக்கு நிதி வழங்கும் வகையில் அறிக்கையைத் திருத்திக்கொள்ள அனுமதிப்பதில் இதயம் நோகிறோம்.

"இன்று இந்தியாவில் ஜனநாயகம் முளைவிடும் பருவத்திலிருக்கிறது. இந்த ஜனநாயகத்தைப் பாதுகாத்து, அது சரியான முழு வளர்ச்சி பெறும் வண்ணம் வளர்ப்பது இவை எல்லாம் அவசியமாகிறது; எனவே, அந்த ஜனநாயகத்தின் கழுத்தை நெரிக்கும் எந்த ஒரு திட்டத்தையும் யோசனையையும் மிகுந்த தயக்கத்துடன் மட்டுமின்றி, சந்தேகத்துடனும்தான் நோக்க வேண்டும்.

"ஒரு அரசியல் கட்சிக்கு ஒருவர் நிதி வழங்க முயற்சிக்கிறார் என்பது, ஜனநாயக வளர்ச்சிக்கு கேடு தேடுவதாகும் என்றே தோன்றும்.

"முடிவுகளை மேற்கொள்ளுவதற்குத் தாராதரங்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை; ஒரு குறிப்பிட்ட முடிவு, பணத்தின் செல்வாக்கால் உருவாக்கப்பட்டது என்றால், அது சனநாயகத்திற்குச் சீரழிவு தேடுவதாகும்.

"வேண்டுமானால் சனநாயக முறைகளும், அலங்காரங்களும் நீடிக்கலாம்; ஆனால் சனநாயக அரசு முறையின் உட்பொருள் மறைந்து போகும்.

"வேறு சில நாடுகளில், சனநாயக அரசு முறைகளைப் பெரும் வியாபாரிகள்—பெரும் பணமூட்டைகள், தங்கள் செல்வாக்கிற்கு உட்படுத்தி—கைப்பற்றி, சனநாயகத்தின் கழுத்தை நெரித்திருக்கிறார்கள் என்பதை சனநாயகத்தின் வரலாறு தெளிவாகக் கூறும்.

"எனவே, ஒரு வாக்காளரை எவராவது ஒருவரின் செல்வாக்கிற்கு — ஆதிக்கத்திற்கு உட்படுத்துவதைத் தவறு—முறையற்றது என்று கண்டித்துத் தடுக்க வேண்டியது அரசியல் வாதிகள், குடிமக்கள் ஆகியோருடைய கடமை மட்டுமல்ல - நீதி மன்றங்களுடையவும் கடமையாகும்; நீதிமன்றங்கள் இந்தக் கடமையை தங்களுக்குள்ள அதிகார வரம்பிற்குள்ளிருந்து செய்யலாம்.

"வாக்காளர், மற்றும் அவரது பிரதிநிதியின் நேர்மை காப்பாற்றப்பட வேண்டும் என்பதோடு, உலகம் முன்னேறியுள்ள வகையையும், ஜனநாயகம் வளர்ந்துள்ள முறையையும் நாம் கண்டறிந்து கொள்ள வேண்டும்.

இன்னும் பல நாடுகள் லட்சக்கணக்கான வாக்காளர்கள்—ஏராளமான நிறுவனங்கள்—அரசியல் கட்சிகள் ஆகியவற்றை உடையனவாயிருக்கின்றன. இந்த நிலையில் பிரச்சாரம் செய்வதற்கு ஏராளமான பணம் தேவைப்படுகிறது. ஆனால் இந்தப் பணம், அந்தந்த அரசியல் கட்சிகளால், தங்கள் ஆதரவாளர்களிடமிருந்து பெறப்படுகிறது; ஆனால், பதனழிக்கிற பணச் செல்வாக்கு என்ற அபாயம் வளருவதை அனுமதிக்கக் கூடாது; உறுதியாக ஒழிக்கப்பட வேண்டும்.

"ஆனால் நாங்கள் சட்டம் காட்டுகிற வழிப்படிதான் நடக்கமுடியுமே தவிர, அரசியல் ஒழுக்கம் இவைபற்றிய கருத்துக்கள் காட்டும் வழியில் அல்ல. அதனால்தான், டாடா நிறுவனம் அரசியல் கட்சிக்குப் பணம் வழங்கக் கோரும் அனுமதியைத் தராமலிருக்க முடியவில்லை"

திட்டம் திண்டாட வைக்கிறதோ?

ரூ. 100 கோடி ஏற்றுமதிக்கு வழி?

புதுடில்லி, ஜுன் 21—

ஆண்டுக்கு ரூ. 100 கோடிக்கு அதிகப்படியாக அந்நியச் செலாவணியை இந்தியா அடைவதற்கான திட்டத்தை ஏற்றுமதி அபிவிருத்திக் குழு தயாரித்துள்ளதாம்.

ஒரே பாதையில்!

நியூயார்க், ஜுன் 21—

"சைப்ரசில் போலீசார் புரிந்து வரும் கொடுமைகள் அங்கேரியில் ரஷ்யா கையாண்ட பயங்கர அடக்குமுறைக்குச் சமமானதேயாகும்"

என்று, பிரிட்டிஷ் அதிகாரிகள் மீது குற்றஞ்சாட்டி, கிரேக்கத் தூதுவர் க்ருஸ்தியன் பார்மாஸ் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

ஹங்கேரி பற்றிய ஐ. நா. குழுவின் தீர்ப்பு:

வசை பாடுவோருக்கு இலங்கை உறுப்பினர் சாட்டை

'எழுச்சி இயற்கையானதே; அன்னியர் தூண்டுதல் அல்ல' என விளக்கம்

கொழும்பு, ஜுன் 21—

ஹங்கேரி பற்றிய ஐ. நா. தனிக் குழுவின் அறிக்கையைக் கண்டிப்பவர்களுக்கு, குழுவில் ஆசியாவின் பிரதிநிதியாக இருந்த ஐ. நா. சபையின் இலங்கைத் தூதவரான ஆர். எஸ். எஸ். குணவர்த்தனே தக்க பதில் தந்திருக்கிறார்.

"ஹங்கேரி மக்களுக்கும் ரஷ்ய இராணுவத்திற்கும்தான் போராட்டம் நடைபெற்றது. 'ஹங்கேரி மக்கள், வெளியாரால் தூண்டப்பட்டனர்', என்பது, பரிகசிக்கத்தக்க முட்டாள்தனமான வாதமாகும்.

"ஒரு நாட்டு மக்கள் ஒரு மனிதன்போல ஓருடலாய் எழுந்து நின்ற எழுச்சியை ஒரு ஒலிபரப்பு உருவாக்கிற்று என்று கூறுவது நம்பக் கூடியதல்ல"—என்று அவர் கூறியிருக்கிறார்.

"போலந்தில் ஆட்சிமுறை ஜனநாயகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்த சம்பவங்கள்; இருபது ஆண்டுகளுக்கு மேலாக முதலில் பாசிசத்தாலும், பின்னர் கம்யூனிசத்தாலும் கொடுமைப் படுத்தப்பட்ட—அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள், ஆட்சியில் சற்று தளர்ச்சி ஏற்பட்டதைக் கண்டனர்; இவைதான் ஹங்கேரி மக்களின் எழுச்சிக்கு பிரதானமான காரணங்களாகும்" என்று குணவர்த்தனே விளக்கியிருக்கிறார்.

"ஹங்கேரியிலிருந்து வெளியேறி விட்ட அகதிகளிடமே அறிக்கைக்கான சாட்சியங்கள் பெறப்பட்டன என்பதால் அவை ஒருதலைப்பட்சமானவை என்று சிலர் கூற முற்படுவதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

"ஒரு விஷயம்; இந்த அகதிகள் எல்லாம் ஹங்கேரி போராட்டத்தில் பங்கு பெற்றவர்கள்; மேலும், சிலர் அந்தப் புரட்சியின் தளகர்த்தர்களாயிருந்தவர்கள்; இருந்தபோதிலும் கூட, நாங்கள் அவர்களது சாட்சியங்களைக் குறுக்கு விசாரணை செய்யாமலோ, தகுந்த பரிசீலனை இன்றியோ ஏற்றுக் கொள்ளவில்லை. நான் ஒரு வழக்கறிஞர் என்பதால், குறுக்கு விசாரணை செய்ய மிகவும் சௌகரியமாயிருந்தது.

"ஜினீவாவில் வைத்து ஹங்கேரி அகதிப் பெண் ஒருவரை நான் தீவிரமாகக் குறுக்கு விசாரணை செய்துகொண்டிருந்தபோது, அப்பெண்மணி என்னைப் பார்த்து, 'இவர் ஒரு கம்யூனிஸ்டு—இவர் ஒரு கம்யூனிஸ்டு; இவர் என்னைக் கொல்ல முயற்சிக்கிறார்,' என்று கூச்சலிட்டார் என்றால், நான் குறுக்கு விசாரணை செய்த முறையைத் தெரிந்து கொள்ளலாம்.

"மேலும், ஹங்கேரி பற்றிய ரஷ்யாவின் கருத்தை அகதிகளிடம் வற்புறுத்தி எடுத்துரைப்பதை எனது கடமையாகக் கொண்டிருந்தேன்"

என்றெல்லாம் குணவர்த்தனே விளக்கியிருக்கிறார்.

மேலும் பத்திரிகையாளரின் கேள்விக்குப் பதிலளிக்கையில், குணவர்த்தனே, 'சுதந்திர ஐரோப்பிய வானொலியின் ஒலிபரப்புகள், ஹங்கேரியில் போராட்டம் நடந்து கொண்டிருக்கும் போது மிகப் பொறுப்பற்றவையாக இருந்தன; குறிப்பாக, ஹங்கேரி மக்களுக்கு அன்னிய உதவி கிடைக்கும் என்ற ஒலிபரப்பு மிகவும் பொறுப்பற்றதாகும்,' என்று அவர் கருத்தறிவித்திருக்கிறார்.

உணவுப் பிரச்சினையிலும் 'இந்தி' கொள்கையா?

தமிழகத்தில் கோதுமையைத் திணிக்க முயற்சிப்பதேன்?

சென்னை, ஜுன் 22—

"கோதுமையை உபயோகிக்க வேண்டும்!

"மக்களுக்கு கோதுமை உபயோகத்தை வலியுறுத்த வேண்டும்!

"சத்துள்ள உணவு கிடைக்க கோதுமையே சிறந்தது!

என்ற முன்மொழிகளுடன், சென்னை அரசாங்கத்திற்கு எவ்வளவு கோதுமை வேண்டுமென்றாலும் தருவதற்கு டில்லி அரசாங்கம் தாராளமாக முன்வந்துள்ளது.

படி ஒன்றுக்கு 0—9—6 வீதம் தாராளமாக நியாய விலைக் கடைகளுக்கு விநியோகிக்கப்படுமாம்.

இதிலிருந்து காட்டில்—குறிப்பாக நெற்களஞ்சியம் என்று போற்றப்படும் தமிழகத்தில் 'அரிசி'ப் பஞ்சமும், பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ளது என்பதும், வடவர் உணவுமுறை தென்னவர் மீது மறைமுகமாகத் திணிக்கப்படுகிறது என்பதும் வெளிப்படையாகத் தெரியவருகிறது.

நம் நாடு
தி. மு. க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 22—6—57 சனி

ஹங்கேரியின் விடுதலை எழுச்சி!

விடுதலை வரலாற்றில் அசாதாரணமானதோர் முக்கியத்துவம் பெறக்கூடிய ஒப்புவமை அற்ற சம்பவமாகும், கடந்த ஆண்டு நவம்பர் திங்களில் ஹங்கேரியில் உருவெடுத்த மக்களின் எழுச்சி.

ஹங்கேரியரின் இந்த இயற்கையான 'சுதந்திர எழுச்சி' மிகக் கொரேமான முறையில் ரஷ்யாவின் மிருக பலம் கொண்ட இராணுவத்தால் அடக்கி ஒடுக்கப்பட்டுவிட்டது என்ற செய்தி முன்பே அறிவிக்கப்பட்டதுதான் என்றாலும் இப்போது இந்த எழுச்சி குறித்து விசாரணை நடத்த ஐ. நா. பொதுச்சபை நியமித்த தனிக்குழுவின் அறிக்கை மூலம் அதிகாரபூர்வமாக்கப்பட்டிருக்கிறது.

'ஸ்டாலினைப் பற்றி குருஷ்சேவ்' என்ற இரகசிய அறிக்கை அம்பலமானதின் இயற்கையான விளைவு, ரஷ்ய முகாமில் ஒடுங்கிக் கிடக்கும் நாடுகளில் ஒன்றான போலந்தில் கண்ணுக்குத் தெரிந்தது.

'ரஷ்யப் பிடிப்பிலிருந்து கூடுதலான சுதந்திரம் வேண்டும்' என்ற போலந்தின் கோரிக்கையை வெற்றிகரமாக ஈடேற்றி வைக்கும் ஆற்றலை, ஸ்டாலின் காலத்தில் 'பழி வாங்கப்பட்ட' கோமுல்கா மற்றும் இதர கம்யூனிஸ்டு தலைவர்கள் பெற்றிருந்தனர்.

போலந்து மக்கள் கொண்டாடிய 'சுதந்திர'த் திருநாளின் வனப்புமிகு காட்சிகளும், இசைத்த 'விடுதலை கீத'த்தின் நற்சுவையும், அண்டை நாடான ஹங்கேரியில்—ரஷ்யாவின் 'அடிமை'களாக வாழும் மக்களின் உள்ளத்தில் ஒருவித கிளுகிளுப்பை ஊட்டின; கண்களில் ஆவலைக் கொணர்ந்தன; சிந்தனையைத் தூண்டின.

மாணவர்கள் முன்னோடிகளாகிக் குரல் எழுப்பினர்; தொழிலாளர்கள் அணிவகுத்து பின்சென்றனர்; மக்களின் இதர பிரிவினரும் ஆதரவு தந்தனர்.

'ரஷ்யாவே, இராணுவத்தை ஹங்கேரியிலிருந்து திரும்பப் பெறு! எங்களுக்கு சுதந்திரம் வேண்டும்' என்ற ஒலி முழக்கம், புடாபெஸ்டு தலைநகரைக் குலுக்கியது.

மக்களின் இதயத்தில் இயற்கையாகப் பீறிட்டெழுந்த இந்த சுதந்திர எழுச்சியை, 'மேலை நாடுகளின்—குறிப்பாக, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தூண்டுதல்', 'பிற்போக்குவாதிகளின் பிதற்றல்' என்று வசைபாடிற்று மாஸ்கோ! அங்கிருந்து ஞானபோதம் பெறும் இந்தியத் துணைக்கண்டத்துக் கம்யூனிஸ்டுகளும் 'கிறல் பிளேட்டு'களாயினர்.

ஹங்கேரியில் இந்த எழுச்சிக்கு சில நாள் முன்தான், அந்த நாட்டு 'கோமுல்கா' என்று வர்ணிக்கப்பட்ட இம்ரி நாகி என்பார் பிரதமராகியிருந்தார்.

ரஷ்யாவின் பிடிப்பிலிருந்து கணிசமான சுதந்திரம் வேண்டும் என்ற கொள்கைக்கு மணமாலை சூடியவர்தான் இம்ரிநாகி; என்றாலும் அவரால் ஹங்கேரி மக்களது சுதந்திர எழுச்சியின் வேகத்தோடு ஓடமுடியவில்லை. அதனால், எழுச்சியுற்ற மக்கள் ஒருடலாய் உருவெடுத்து ஒரு குரலாய் எழுப்பிய கோரிக்கைகளை, கிரெம்ளின் மாளிகையின் கோபப்பார்வைக்கு அஞ்சாமல் ஈடேற்றி வைப்பதில் சிறிது தயக்கமும் தாமதமும் காட்டினார். ஆனால் மக்களோ விடுதலைத் தாகம் ஊட்டிய வெறியில் பிரதமரை நிர்ப்பந்திக்கத் தொடங்கினர். அத்தனை மக்களின் ஓங்காரக் குரலையும் அமிழ்த்திவிட்டு நாகியின் குரல் கேட்டது; 'ரஷ்யாவே, இராணுவத்தைத் திரும்பப் பெறு! எங்களுக்கு சுதந்திரம் வேண்டும்' என்று. மக்களுடைய பெரும் கரடுமுரடான குரலிலிருந்து வேறுபட்ட மென்மையான, விநயத்தோடு கூடிய இந்தக் குரல் கிரெம்ளின் மாளிகையில் முட்டி மோதிற்று. அதன் எதிரொலியோ பயங்கரமாகக் கேட்டது ஹங்கேரியில். ரஷ்ய இராணுவத்தின் டாங்கிப் படைகள் புடாபெஸ்ட் வீதிகளில் பிணவாடையை எழுப்பின; இரத்த வெள்ளத்தைப் பாய்ச்சின; விடுதலை வீரர்கள் வேரறுந்த மரம்போலச் சாயும் போதும் 'சுதந்திரம் சுதந்திரம்' என்று சொல்லிவிட்டுச் சாய்ந்தனர். நாகி, ஐ. நா.-விடம் உதவி கோரி முறையிட்டிருந்தார். உதவி பெறுமுன் அவர் தஞ்சம் புகவேண்டிய நிலை ஏற்பட்டது. செஞ்சேனை ஹங்கேரியில் ஜெனோஸ் காதரின் தலைமையில் ஒரு பொம்மை சர்க்காரை நிறுவிப் பாதுகாக்கத் தொடங்கிற்று. இவை எல்லாம் ஒரு சுத்தமான தேசீய எழுச்சி மிகக் கொடூரமாக அடக்கப்பட்டுவிட்ட சம்பவம் பற்றிய உண்மைகள்.

'ரஷ்யாவின் இராணுவத் தலையீட்டினால்தான் அங்கேரியின் தேசீய சுதந்திர எழுச்சி அடக்கப்பட்டது' என்ற உண்மையை விடுதலை விரும்பிகளின் கண்ணிலிருந்து மறைக்க, இங்குள்ள கம்யூனிஸ்டுகளின் ஆகப் பெரிய தலைவர்களில் முக்கியமானவர் என விளம்பரப்படுத்தப்படும் ஒருவர், 'காஷ்மீரில் இந்திய இராணுவம் தலையிட்டதே—அது நியாயம் என்றால், அங்கேரியில் ரஷ்யா தலையிட்டதும் நியாயம்தானே?' என்று வாதிட்டு, தமது மேதாவிலாசத்தையும் தமக்கு ஞானப் பாலூட்டி கிளிப்பிள்ளைப் பாடம் கற்றுத் தரும் மாஸ்கோவிடம் தமக்குள்ள விசுவாசத்தையும் காட்டிக்கொண்டார்.

ஆனால், ஐ. நா. தனிக் குழு, ஹங்கேரி நிகழ்ச்சி, அந்த நாட்டு மக்களின் இயற்கையான அப்பழுக்கற்ற தேசீய விடுதலை எழுச்சியே என்று தீர்ப்பளித்திருக்கின்றது.

ஐ. நா. தனிக் குழுவின் அறிக்கையில், இந்தியத் துணைக் கண்டத்துக் கம்யூனிஸ்டுகள்—குறிப்பாகத் தென்னாட்டு கம்யூனிஸ்டுகள் பிரதானமாக உணரவேண்டிய உண்மை அதுதான்.

ஹங்கேரி பற்றிய ஐ. நா. தனிக் குழுவின் இந்த ஒருமித்த கருத்திற்கு, ஆயிரம் உள்நோக்கங்கள் கற்பித்தாலும், இதனை உருவாக்குமுன் ஒரு முறை ஹங்கேரிக்குச் சென்று நிலைகளை நேரில் கண்டறியவும், தனது கருத்தைத் தெரிவிக்கவும் காதர் சர்க்கார், குழுவிற்கு அனுமதிதர பிடிவாதமாக மறுத்துவிட்ட ஒன்றே போதும், இந்தக் கருத்து நியாயத்தின்பாற்பட்டதாகும் என்பதை ருசுப்பிக்க.

ஐ. நா. தனிக்குழுவின் அறிக்கையில் காணப்படும் இதர விஷயங்களும், உலகெங்கிலுமுள்ள உண்மையான விடுதலை விரும்பிகள் அனைவர்க்கும் சுவையோடு படித்தறியக் கூடியனவாகும்.

ஒளிவிட்டுப் பிரகாசித்த ஹங்கேரி மக்களின் விடுதலை எழுச்சி, இன்று மூர்க்கத்தனமாக அடக்கப்பட்டிருந்தாலும், எதிர்காலத்தில் நிச்சயம் வெற்றி பெறும் என்று நம்பிக்கை தெரிவிப்பதன்றியில், விடுதலை விரும்பிகள் செய்யக்கூடியது ஒன்றுமில்லை.

இராணுவச் செலவை ஏன் கூட்ட வேண்டும்?

ஆயுதப் போட்டியில் ஈடுபடுவதால் பலன் உண்டா?

நிர்வாக செலவு ஐந்து மடங்கு அதிகரிக்கிறதே!

பி. சோ. தலைவர் கிருபளானி கண்டனம்

பம்பாய், ஜூன் 19—

"டில்லியின் பொருளாதாரக் கொள்கை தோற்றுவிட்டது" என்று கருத்தறிவித்திருக்கிறார், ஆச்சாரியா கிருபளானி.

கூட்டம் ஒன்றில் பேசிய அந்த பி. சோ. தலைவர், 'சர்க்காரின் நிர்வாகச் செலவு, சுதந்திரம் பெற்றபின் 5 மடங்காக உயர்ந்துவிட்டது' என்றும், 'சர்க்காரின் நிர்வாக—இராணுவச் செலவுகள் அதிகரித்துக்கொண்டேயிருந்தும் வருமான வழிகளைத் தேடாமல் அசட்டையாயிருந்தனர் சர்க்கார்' என்றும் குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

"வேலையில்லாத் திண்டாட்டத்தை குறிப்பிட்ட அளவுகூட குறைக்க முடியாதிருக்கும் கனரகத் தொழில்களை அதிகரித்துக் கொண்டே போவதை நான் எதிர்க்கிறேன்; இந்தத் தொழில்களுக்கு மிக அதிகமான மூலதனம் தேவைப்படுகிறது; ஆனால் தொழிலோ மிகக் குறைவானவர்களுக்கே வேலை தருகிறது.

"சர்க்காரின் இப்போதைய பொருளாதாரக் கொள்கை மக்களின் வாங்கும் சக்தியை உயர்த்தத் தவறிவிட்டதுடன், மக்களின் தேவை என்ன என்பதையும் கணக்கிலெடுத்துக் கொண்டதாக இல்லை.

"மேலும், கோடிக்கணக்கான ரூபாய் செலவில் பெரும் மாளிகைகளும், விடுதிகளும் கட்டப்படுகின்றன. இந்தத் தொகையை எல்லாம் திட்டத்திற்குப் பயன்படுத்தலாம்.

"ஒரு பெரும் வல்லரசுடன் தொடர்புகொண்டு ஆயுத உதவி பெற்றுவரும் ஒரு நாட்டுடன், டெல்லி சர்க்கார், பலனற்ற ஆயுதப் போட்டியில் ஈடுபடுகிறது

"இதன் விளைவாக, நிதிநிலைமைகள் வளமற்றுப்போய், சர்க்கார் கொடுமையான வரி விதிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது"

என்றும் கிருபளானி கண்டித்துள்ளார்.

புதிய வரி விதிப்புகள்

மத்திய உதவி மந்திரியின் உறுதிமொழி

பூனா, ஜூன் 20—

"யோக்கியமாக வரி செலுத்துவோரிடமிருந்து எந்தவித இடையூறுமின்றி சொத்து, மற்றும் செலவு வரிகள் வசூலிக்கப்படும்'

என்று, மத்திய உதவி நிதி மந்திரியான பலிராம் பகத் என்பார் இங்கு கூறியிருக்கிறார்.

"புதிய வரி விதிப்புகளை அமுல் செய்யும்போது, துவக்கத்தில் மிக எச்சரிக்கையுடனிருக்க வேண்டும்; வரி தராமல் ஏமாற்றுவோர் தகுந்த தண்டனை பெறவேண்டும்; அதோடு யோக்கியமாக வரி செலுத்துவோர் எந்தவித இடையூறுகளுக்கும் ஆளாகாமல் பார்த்துக்கொள்ளவேண்டும் என்பது எங்களுக்குத் தெரியும்,"

என்றும் அவர் கூறியிருக்கிறார்.

பாதுகாப்பு இலாகாவில் சிக்கன முறையாம்!

புதுடில்லி, ஜூன் 21—

'சிக்கனம் என்றால், வீண் விரயமில்லாமல் செலவு செய்கிற பணத்துக்கு முழு அளவில் பலன் கிடைக்கும்படி பார்த்துக்கொள்வதுதான்'—என்று, மத்திய பாதுகாப்பு அமைச்சர் வி. கே. கிருஷ்ணமேனன் கூறியிருக்கிறார்.

பாதுகாப்புச் செலவினங்கள் எல்லாம் இனிமேல் வெகு கண்டிப்பாகக் கண்காணிக்கப்படும்; வீண் செலவுகள் தவிர்க்கப்படும்.

பாதுகாப்பு இலாகாவில் இலஞ்சக் குற்றங்கள் ஏதாவது தெரியவந்தால் அது கண்டிப்பான முறையில் பரிசீலிக்கப்பட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ரூ. 2 இலட்சம் மதிப்புள்ள மட்டரகமான சீன மிளகாய்

இலங்கையர் நிராகரிப்பு

கொழும்பு, ஜூன் 20—

கம்யூனிஸ்டு சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சுமார் 200 டன் மிளகாய் வற்றல், உபயோகத்திற்கு லாயக்கற்றது என நிராகரிக்கப்பட்டதாக 'டைம்ஸ் ஆப் சிலோன்' கூறுகிறதாம்!

'இந்தச் செஞ்சீன இறக்குமதிச் சரக்கிற்கு ஆரம்பத்தில் ரூ. 2 இலட்சம் விலை குறிக்கப்பட்டிருந்தது. இவ்வளவு பெருமளவு இறக்குமதிச் சரக்கு ஏன் மட்டரகமாக இருக்கிறது என்பதை விளக்க யாதொரு காரணமும் கூறப்படவில்லை.' என்று இப்பத்திரிகை கூறுகிறதாம்!

நஷ்டமீடு கோரும் உள்ளூர் வியாபாரிகள், இலங்கை அதிகாரிகளிடம் புகார் செய்துள்ளனர். கம்யூனிஸ்டு சீனாவிலிருந்து இறக்குமதி செய்ய தங்களுடைய லைசென்சுகளை இவர்கள் இலங்கை அதிகாரிகள் மூலம்தான் பெற்றனராம்!

காங்கிரஸ் ஆட்சியில் வீண் ஆடம்பரங்கள்?

மாநில முதலமைச்சர்களுக்கு பண்டிதரின் வேண்டுகோள்

புதுடில்லி, ஜூன் 20—

"இருக்கும் கார்களைக் கொண்டே அலுவல்களை நடத்த வேண்டும்; புதுக் கார்கள் வாங்குவது தவிர்க்கப்பட வேண்டும்!

"அமைச்சர்களுக்கோ அதிகாரிகளுக்கோ புதிய பெரிய வீடுகள் இனிமேல் கட்டுவது கூடாது; அந்தஸ்தும் கௌரவமும் ஒளிரும் வீட்டைப் பொறுத்ததல்ல!

"வெளிநாடுகளுக்குச் செல்லும் தூதுக்குழுக்கள் கணிசமாகக் குறைய வேண்டும்!

"ஆடம்பரத்தையும் பகட்டையும் தவிர்க்க வேண்டும்,"

என்று, மாநிலங்களின் முதலமைச்சர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் பண்டித நேரு இந்த யோசனைகளைத் தெரிவித்துள்ளாராம்.

தேவை எல்லாம் 1,50,000 டன் அரிசியே!

'வேண்டுமானால் உணவு மண்டலத்திலிருந்து விலகிக் கொள்கிறோம்'

காமராசர் கூறுகிறார்

சென்னை, ஜூன் 20—

"வேண்டுமானால் நாங்கள் உத்தேச உணவு மண்டலத்திலிருந்து ஒதுங்கிக்கொள்கிறோம். எங்களுக்குத் தேவை எல்லாம் அடுத்த ஆறு மாத காலத்திற்கு, எங்களுக்கு மத்திய சர்க்கார் 1,50,000 டன் அரிசி தரவேண்டும் என்பது தான்"

என்று முதன் மந்திரி காமராசர் கூறியிருக்கிறார்.

தென் உணவு மண்டலம் உருவாக்குவது பற்றி இன்னும் டெல்லியிலிருந்து உத்தரவு வரவில்லை என்றும் அவர் கூறியிருக்கிறார்.

பழைய வைத்திய முறை

மைசூரில் நூல் கண்டுபிடிப்பு

மைசூர், ஜூன் 20—

ஆயுர்வேத முறைப்படி வைத்தியம் சம்பந்தமான நூல்—'கல்யாண காரகா' மைசூர் ஆராய்ச்சிக் கழகத்திற்குக் கிடைத்துள்ளதாம்.

இது ஏட்டுச் சுவடிகளாக உள்ளதாம். ஜைன நிபுணர் பூஜ்ய பாதா என்பவர் இயற்றிய 600 பாடல்கள் இதில் உள்ளனவாம். இதற்கான உரை கன்னடத்தில் உள்ளதாம்.

மாயக்கொண்டா என்ற கிராமத்தில் இந்நூல் கிடைத்ததாம்; சுமார் 500 ஆண்டுகளுக்குமுன் இந்த நூல் எழுதப்பட்டதாகக் கருதப்படுகிறது.

கலாச்சாரத் தூதுக் குழுவுக்குத் தடை!

ஆலயத்திற்குள் நுழைவதற்கு அனுமதி மறுப்பு

காட்மண்டு, ஜூன் 20—

நேபாளத்திலுள்ள பசுபதிநாதர் ஆலயத்தில் பிரவேசிக்க சீனக் கலாச்சாரத் தூதுகுழு உறுப்பினர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டதாம்.

தர்ம பாதுகாப்புக்குழு அறிவித்ததின் பேரில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாம். நேபாள தினசரி ஏடான 'சமாஜ்' இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

தெரிந்துகொள்ளுங்கள்

ரஷ்ய நாட்டில் மொத்தம் 4 இலட்சம் நூல் நிலையங்கள் உள்ளனவாம்! இவற்றில் சுமார் 150 கோடி புத்தகங்கள் உள்ளவாம்! இதுமட்டுமின்றி, கல்வி அறிவை பரப்பும் திரைப்பட 'யூனிட்'டுகள் மொத்தம் 63,000 உள்ளனவாம்!

அஜர்பெய்ஜான் குடியரசில் மொத்தம் 109 செய்திப் பத்திரிகைகள் உள்ளனவென்றும், இவற்றில் மொத்தம் 5 இலட்சம் பிரதிகள் அச்சிடப்படுகின்றன வென்றும் தகவல் தாப்பட்டிருக்கிறது.

‘திராவிடம் விடுதலை பெறும்போது புதுவை தனித்திருக்காது’

அண்ணா, மற்றும் வெற்றி பெற்ற கழக வீரர்களுக்கு புதுவை மக்கள் வரவேற்பு

16—6—57 இரவு 7 மணியளவில், செஞ்சிச்சாலைத் திடலில், புதுவை வட்டத் தி. மு. கழகங்களின் சார்பில், சென்னை சட்டமன்ற தி. மு. கழக உறுப்பினர்கட்குப் பாராட்டுப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு 10,000-க்கும் அதிகமான அளவில் ஆண்களும், பெண்களும் வந்திருந்து, அண்ணாவின் அறிவுரை சொற்பொழிவை ஆர்வமோடு கேட்டுக்கொண்டிருந்தனர்.

மேடைக்குப் பின்புறமும் பேச்சொலி கேட்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமையால், ஆயிரக்கணக்கான மக்கள் பின்புறத்திலும் குழுமியிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட பந்தல் மேடையில் அண்ணா முதலியவர்கள் வந்து அமர்ந்தபோது, மக்களின் ஆரவாரம் அளவு கடந்ததாயிருந்தது.

கூட்டத்திற்கு, புதுவை வட்டத் தி. மு. கழகச் செயலாளர் தோழர் ச. சிவப்பிரகாசம் தலைமை வகித்துப் பேசுகையில், ‘சென்னை மாநிலமும், புதுவை மாநிலமும் டில்லியின் ஆட்சிக்கு உட்பட்டிருப்பினும், மொழி—இனம்—பண்பாடு ஆகியவற்றால் உறவு கொண்டிருக்கும் நாம், ஆளும் முறையால் வேறாக்கப்பட்டிருக்கிறோம்; இந்த அவலநிலை மாறவேண்டும். அன்றியும், ‘திராவிடத்தின் வாழ்வே எங்கள் வாழ்வு’—அதன் தாழ்வே எங்கள் தாழ்வு என்பதை நாங்கள் அறிவோம்; ஆகவே, திராவிடத்தின் விடுதலைக்காகப் பணியாற்றும் தி. மு. கழகச் சார்பில் வெற்றி பெற்ற உங்கள் அனைவரையும் புதுவை வட்டத்தின் சார்பில் பாராட்டி வரவேற்கின்றோம்” என்று கூறினர்.

பின்னர், அண்ணா அவர்களுக்கும், தோழர்கள் க. அன்பழகன், ஏ. கோவிந்தசாமி, எம். செல்வராஜ் ஆகியவர்களுக்கும் வட்டத்தின் சார்பாக மலர்மாலை அணிவிக்கப்பட்டுப் பாராட்டுரை வாசித்துக் கொடுக்கப்பட்டது.

திண்டிவனம் தொகுதியில் கா. ஜ. க. சார்பில் வெற்றி பெற்ற இரு எம். எல். ஏ.-க்களும் கூட்டத்திற்கு வந்திருந்தனர்; அவர்கட்கும் வட்டத்தின் சார்பில் மலர்மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டது.

பின்னர், அண்ணா முதலிய கழக எம். எல். ஏ.-க்களுக்குப் பல ஊர்க் கிளைகளின் சார்பிலும், தனிப்பட்டோர் சார்பிலும் ஏராளமான கைத்தறித் துண்டுகளும், மலர்மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

வழக்கறிஞர் சு. பெருமாள் அவர்களால் ‘ஹோம் லேண்ட்’ ஆங்கில வார இதழின் வளர்ச்சிக்காக ரூ. 50 நன்கொடையாக அண்ணா அவர்களிடம் தரப்பட்டது.

பாராட்டிற்கு நன்றி கூறும் வகையில் தோழர்கள் எம். செல்வராஜ், ஏ. கோவிந்தசாமி, க. அன்பழகன் ஆகியோர் பேசினர்.

இறுதியாக அண்ணா அவர்கள் பேசுகையில் தேர்தலுக்குப்பின் ஏற்பட்டுள்ள நிலைமைகளையும், கழகத்தின் கோட்பாடுகளையும் நன்கு விளக்கி, இந்த நாட்டின் விடுதலையைப் பெறுவதே கழகத்தின் நோக்கம் என்பதை எடுத்துக்காட்டி, திராவிடம் விடுதலை பெறும்போது, புதுவையும்—காரையும் தனித்திருக்காது என்றும், இவற்றின் விடுதலைக்கும் நலனுக்கும் கழகம் பாடுபடும் என்றும் உறுதி கூறி, புதுவை மக்களுக்கும், பாராட்டுத்தந்த கழகத்தவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

பின்னர் நன்றி கூறலுடன் கூட்டம் இரவு 9-45 மணிக்கு இனிது முடிவுற்றது.

பிராவிடண்ட் நிதிச் சட்டம்

எரிவாயுத் தொழிலுக்கும் விரிவாகும்

புதுடில்லி, ஜுன் 19—

“ எரிவாயுத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் தொழிலாளர் பிராவிடண்ட் நிதிச் சட்டத்தை விரிவாக்குவதின் மூலம், மேலும் சுமார் 3,600 தொழிலாளர்கள் பயனடைவார்கள் ”

என்று, டெல்லி சர்க்கார் பத்திரிகைக் குறிப்பொன்று கூறுகிறது.

1952 நவம்பரில் கொண்டு வரப்பட்ட இச்சட்டம், 50 பேர்களுக்குமேல் வேலை செய்கிற-மூன்றாண்டுகள் இயங்கும் தொழிற்சாலைகள் நிறுவனங்கள் ஆகியவற்றில் பணியாற்றுபவர்களுக்குப் பலனளிக்கிறது என்றும், இதுவரை சுமார் 5,475-தொழிற்சாலைகளில் வேலை செய்வோர்கள் இச்சட்டத்தால் பயனடைந்துள்ளனர் என்றும் அந்தக் குறிப்புக் கூறுகிறது.

‘அம்யூனிஷன் டிப்போவை மூடாதீர்’

டில்லிப் பேரரசிற்கு கும்மிடிபூண்டி தி. மு. கழக வேண்டுகோள்

சென்னை, ஜுன் 20—

“ கும்மிடிபூண்டியிலுள்ள ‘அம்யூனிஷன்’ டிப்போவைக் காலி செய்ய இந்தியப் பேரரசு மேற்கொண்டிருக்கிற முடிவு மிக மிகக் கண்டனத்திற்குரியதாகும். இம்முடிவை இந்தியப் பேரரசு உடனே கைவிட வேண்டும்,”

என்று, புதுகும்மிடிபூண்டி தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற கிளைக் கழக இரண்டாவது ஆண்டு நிறைவு விழா—மேதின விழாப் பொதுக்கூட்டத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

கடந்த மாதம் 25-ந் தேதி அன்று தோழர் ஆ. கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் தோழர்கள் வி. எஸ். கோவிந்தராசன், பி. எம். கருணாகரன். ப. செ. தூயமணி, புவியரசு, குற்றப்பன் ஆகியோர் பேசினர்.

சென்னை மாநிலத்தில், ‘மதராஸ் ஹேண்ட் கர்ச்சிப்’ என்ற கைக்குட்டைத் துணிகளை நெய்கின்ற நெசவாளர்கள் வேலையற்றிருப்பதை இம்மாநில அரசாங்கத்தின் கவனத்திற்கு அக்கூட்டத்தின் வாயிலாகக் கொண்டுவரப்பட்டது. மற்றும் புதிய வரிகளைக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (ந. கி.)

‘டில்லியில் அதிகாரங்கள் குவிந்திருக்கக் கூடாது’

அனந்தசயனம் அய்யங்கார் தெரிவிக்கும் எதிர்ப்பு

சேலம், ஜுன் 19—

“ இந்தியப் பேரரசிடம் அதிக அதிகாரங்கள் இருக்கக் கூடாது,”

என்று, இந்திய பாராளுமன்றத் தலைவர் (சபாநாயகர்) எம். அனந்தசயனம் அய்யங்கார் கூறியிருக்கிறார்.

காலஞ்சென்ற சி. விஜயராகவாச்சாரியாரின் 105-வது பிறந்ததின விழா சம்பந்தமாக 18-ந் தேதி மாலை விஜயராகவாச்சாரியார் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் குறிப்பிட்டதாவது :—

“மத்தியப் பேரரசிடம் அதிக அதிகாரங்கள் இருக்க வேண்டும் என்று சிலர் கூறுகிறார்கள் ; இப்பொழுது மத்தியப் பேரரசிடமிருந்து பல அதிகாரங்கள் மாகாண அரசாங்கங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. அப்படி இருந்தும், ‘வடநாடு தென்னாட்டை அடக்கி ஆளுகிறது’ என்று புகார் கூறப்படுகிறது. மத்தியப் பேரரசிடம் அதிகாரங்கள் அதிகமாவதை நான் எதிர்க்கிறேன். அதிக அதிகாரங்கள் மத்திய பேரரசிடம் இருக்கக்கூடாது.

“தேர்தலில் நிற்கும் அபேட்சகர்களுக்கு கல்வி முதலியவைகளில் யோக்கியதாம்சம் நிர்ணயிக்க வேண்டும் என்று சிலர் கூறுகிறார்கள். இந்தியா முழுமையிலும் ஆரம்பக் கல்விகூட கட்டாயமாக அமுலாக்கப்படவில்லை. இந்த நிலையில் அபேட்சகர்களுக்கு எப்படி கல்வி யோக்கியதாம்சம் நிர்ணயிப்பது? ஒரு குறிப்பிட்ட தொகை வரி கட்டுகிறவர்கள் தான் தேர்தலில் நிற்க முடியும் என்று நிர்ணயம் செய்தாலோ, பணக்காரர்கள் மட்டும் தேர்தலில் போட்டியிட முடியும்; ஏழைகள் தேர்தலில் போட்டியிட முடியாது. எல்லோரும் தேர்தலில் போட்டியிட வசதி செய்யும் பொருட்டுதான் கல்வி முதலிய யோக்கியதாம்சங்களை நிர்ணயம் செய்யவில்லை.

“தேர்தலில் சுயேட்சை அபேட்சகர்களை ஆதரிக்கக் கூடாது; சுயேச்சை அபேட்சகர்களுக்கு என்ன கொள்கைகள் இருக்கின்றன? ஆகவே, தேர்தல் சமயங்களில் ஏதாவது ஒரு கட்சி அபேட்சகரை மக்கள் ஆதரிக்க வேண்டும். சுயேச்சைவாதிகளும் சுயேச்சைகளாக போட்டியிடாமல் ஏதாவது ஒரு கட்சியில் சேர்ந்து போட்டியிட வேண்டும்.”

தாழ்த்தப்பட்ட மக்களை முன்னேற்ற யாழ்ப்பாணம் தி.மு.க. தீவிர முயற்சிகள்

ஆதரவு தர முற்போக்காளருக்கு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஜுன் 20—

“ ஆதிதிராவிட மக்களான தாழ்த்தப்பட்ட சமுதாயத்தவருக்கு எவ்வித உரிமையும் தரப்படாமல், அவர்களை ஒடுக்கி அடக்கிவைத்திருக்கும் இன்றைய சமுதாய அமைப்பு முறை, திராவிட இன மக்களின் முன்னேற்றத்திற்குப் பெரும் தடைக்கல்லாய் அமைந்து இருக்கிறது. தாழ்த்தப்பட்டுக் கிடக்கின்ற அம்மக்களின் முயற்சி செய்ய விரும்பும் எந்த முற்போக்குக் கட்சிகளுடனும் நாங்கள் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம் என்பதையும், தாழ்த்தப்பட்ட மக்களை முன்னேற்றுவிப்பதற்காக மேற்கொள்ளப்படும் அலுவலில் ஒத்துழைக்க விரும்பும் எந்த ஒரு தனிப்பட்டவரின் ஒத்துழைப்பையும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

மேற்கண்ட இத்தீர்மானம், கடந்த 16-ந் தேதியன்று நடைபெற்ற இலங்கை தி. மு. கழக யாழ்ப்பாணம் கிளைக் கழகத்தின் செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்கு என்று மற்றும் சில அமைப்புகளைப்போல், வெறும் தீர்மானம் என்ற முறையில் அல்லாமல், அத்தீர்மானத்தைச் செவ்வனே நிறைவேற்றுவதற்கான வழிமுறைகளிலும் மேற்படி கிளைக் கழகம் முனைந்துள்ளது.

அதற்கான முதல் நடவடிக்கையாக, மேற்கண்ட திட்டத்தை நிறைவேற்ற ஒரு தனிப்பட்ட குழு தேர்ந்தெடுக்கப்பட இருக்கிறது.

ஏற்படுத்தப்பட இருக்கிற அக்குழுவில் உள்ள ஒவ்வொருவரும் தம்முடன் உதவியாகச் சிலரையும், ஆதிதிராவிட மக்களில் ஐவரில் குறையாதோரையும் சேர்த்து அறமுறையில் செயலாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருக்கிறது.

மேற்படி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை ஏற்றுக்கொள்ளும் ஆதிதிராவிடப் பெருங்குடி மக்கள், இலங்கை தி. மு. கழகத்தில் உறுப்பினர்களாகச் சேர்ந்தோ, வெளியில் இருந்துகொண்டே கழகத்தின் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டோ ஒத்துழைக்குமாறு மேற்படி கிளைக் கழகத்தால் அழைக்கப்பட்டிருக்கின்றனர்.

நடைமுறைச் செயல்கள் குறித்து மற்றும் சில விரிவான தீர்மானங்களும் அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. (ந. - கி.)

சென்னப்பநாய்க்கன்பாளையத்தில்

தி.மு.க. பொதுக்கூட்டம்

பஞ்சாயத்து அமைக்க மாநில அரசுக்கு வேண்டுகோள்

நெல்லிக்குப்பத்தை அடுத்த சென்னப்ப நாய்க்கன் பாளையம் தி. மு. கழகத்தின் சார்பில், கடந்த 25—5—57ல் தோழர் மூசா தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில், சென்னப்ப நாய்க்கன் பாளையம், நடுவீரப்பட்டு ஆகிய இடங்களின் மொத்த மக்கள் தொகை பத்தாயிரத்திற்கும் அதிகமாக இருந்தும்கூட அங்கு இதுவரை பஞ்சாயத்துக் குழு அமைக்கப்படாமலிருப்பது குறித்து வருத்தம் தெரிவித்தும், உடனே அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு மாநில அரசை வற்புறுத்தியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

மேலும் அவ்வூரில் மாவட்டக் கழகச் சார்பில் நடைபெற்று வந்த மருத்துவ விடுதி எக்காரணமுமின்றி நிறுத்தப்பட்டு மூடிக்கிடப்பதற்கு வருத்தம் தெரிவித்தும், மீண்டும் அதனை உடனே ஆரம்பித்து அவ்வூரில் மருத்துவ வசதியை ஏற்படுத்தித் தருமாறு மாவட்டக் கழகத்தவரை வேண்டியும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. (ந. - கி.)

கழகத் தோழர்களின் பொது நலப்பணி

அறிவை பரப்பும் ஆக்க வேலைக்கு ஆதரவு தர வேண்டுகோள்

வீரபாண்டி, ஜுன் 20—

வீரபாண்டியை அடுத்த பூலாவரி எனும் கிராமத்தில், இதுவரையிலும், குழந்தைகள் கல்வி பெறுவதற்கென ஒரு பள்ளிக்கூடம்கூட இல்லாமல் இருந்து வந்தது. அந்தப் பெருங்குறை சென்ற இரண்டு வாரங்களுக்கு முன், அவ்வூர் தி. மு. கழகத் தோழர்கள் மேற்கொண்ட இடைவிடா முயற்சியின் காரணமாக நிவர்த்தி செய்யப்பட்டிருக்கிறது.

அக்கிராமக் கழகத் தோழர்கள் அனைவரும் ஒன்று திரண்டு, மேற்படி பள்ளிக்கூடம் திறக்கவேண்டுமென்பதற்காக, அவ்வூர் பொது மக்களிடம் நிதி வசூலித்து, வசூலித்த நிதியுடன் பெரும்பாலான கழகத் தோழர்கள் கொடுத்த அதிகப்படியான பணத்தையும் சேர்த்து கட்டிடமெழுப்பி, கடந்த 7-ந் தேதியன்று பள்ளிக்கூடத் திறப்பு விழாவையும் சிறப்பாக நடத்தியிருக்கின்றனர்.

மேற்படி துவக்கப் பள்ளியின் துவக்க விழாவிற்கு பெரிய சேவி அவர்கள் தலைமை வகித்தார். கழகப் பொருளாளர் தோழர் மு. சின்னத்தம்பி பள்ளியைத் திறந்துவைத்தார். கழகச் செயலாளர் தோழர் எஸ். ஆறுமுகம் கல்வியின் அவசியம் குறித்தும், மேற்படி பள்ளிக்கூட வேலைக்கு ஒத்தாசை அளித்த அனைவருக்கும் நன்றி தெரிவித்தும் சொற்பொழிவாற்றினர்.

அவர் பேசுகையில், ‘இது போன்றே கிராம மக்களின் முன்னேற்றத்திற்குத் தி. மு. கழகம் பல வகைகளிலும் பாடுபடும்,’ என்று உறுதி கூறி, ‘அந்த முயற்சிகளுக்கும் பொதுமக்கள் ஆதரவு தரவேண்டும்,’ என்று கேட்டுக்கொண்டார்.

மற்றும் பல தோழர்கள் சொற்பொழிவாற்றினர். (ந-கி.)

தோழர் இரா. அதிமணி

கொழும்பு, ஜுன் 17—

இலங்கை தி. மு. கழக துணைச் செயலாளர் தோழர் இரா. அதிமணி அவர்கள் சென்ற 14—6—57லிருந்து உடல்நலம் குன்றி படுக்கையில் இருக்கிறார்.

சென்ற திங்கள் கழகப் பிரச்சாரத்திற்காக மலைநாட்டுப் பகுதிகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்த அவர் காலில் கட்டையொன்று குத்தி, அதற்கு வீட்டு மருத்துவம் செய்து பலனற்றுப் போகவே தற்போது அறுவை மூலம் ‘சிறுய்’ ஒன்று எடுக்கப்பட்டு நலமடைந்து வருவதாக இலங்கை தி. மு கழகத் தோழர் சு. கா. சுந்தராசன் அறிவிக்கிறார்.

மக்கள் மத்தியில் கழகம்

மேலும் விரிவடைய!

பர்மா தி. மு. கழகத்தின் முயற்சி

இரங்கூன், ஜுன் 20—

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கண்ணியம் - கடமை - கட்டுப்பாடு, அதற்கு மக்கள் தரும் ஆதரவு ஆகியவைகள் குறித்து அவ்வப்போது ஆங்கிலம், தமிழ் போன்ற பல செய்தித் தாள்களில் வெளியிடப்பட்டுள்ள கருத்துக்களை உள்ளடக்கிய புத்தகம் ஒன்றை வினியோகிப்பதென, பர்மா திராவிட முன்னேற்றக் கழகம் தீர்மானித்து, அதற்கான வேலைகளும் முடிவுறும் கருவாயிலிருக்கின்றன.

தமிழகத்தில் நடைபெற்ற தேர்தலில் தி. மு. கழகம் பெற்றிருக்கும் வெற்றி, திராவிடத்தின் வரலாற்றிலே ஒரு புனிதமான கட்டம் என்ற உண்மையை பர்மாவிலிருக்கும் தமிழ் மக்களுக்கும் அந்நாட்டவருக்கும் எடுத்துச் சொல்லும் நோக்கத்துடன் பர்மா தி. மு. கழகம் கடந்த 9-ந் தேதி அன்று ஓர் வெற்றி விழாப் பொதுக்கூட்டத்தையும் சிறப்பாக நடத்தியிருக்கிறது. (ந. கி.)

ஜோர்தான் பாராளுமன்றம்:

3 திங்களுக்கு ‘சஸ்பெண்டு’

அம்மான், ஜுன் 18—

ஜோர்தான் பாராளுமன்றத்தை 3 மாதங்களுக்கு ‘சஸ்பெண்டு’ செய்திருப்பதாக ஜோர்தான் அமைச்சரவை உத்திரவு பிறப்பித்துள்ளது.

இந்த நடவடிக்கை ஏன் ஏற்பட்டது என்பதற்கு யாதொரு காரணமும் கூறப்படவில்லை. அமைச்சரவையின் தனிக் கூட்டத்திற்கு அரசர் உசேன் தலைமை வகித்துள்ளார்.

நீக்ரோக்களுக்குக் குடியுரிமை

வாஷிங்டன், ஜுன் 18—

நீக்ரோக்களுக்கு சில உரிமைகளை உறுதிப்படுத்தும் மசோதாவுக்கு அமெரிக்க சபை அங்கீகாரம் தந்துள்ளது.

கேரள மாநில அரசாங்கச் சின்னம்

திருவனந்தபுரம், ஜுன் 21— கேரள மாநில அரசாங்கத்திற்கு ஒரு தகுந்த சின்னம் வேண்டுமெனக்கூறி, அதற்கான 'டிசைன்'கள் அனுப்புமாறு மாநில சர்க்கார் கேட்டிருக்கிறது.

சிறந்த 'டிசைனு'க்கு ரூ. 500 பரிசு தரப்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பிற மதத்தார் நுழைய தடை விதிக்கும் குருவாயூர் கோவில்

வினோபா கண்டனம்

திருச்சூர், ஜுன் 21— கேரளத்தில் உள்ள குருவாயூர் என்ற இடத்திலிருக்கும் பிரசித்தி பெற்ற கோவில் ஒன்றுக்குச் செல்ல வினோபா மறுத்துவிட்டிருக்கிறார்.

"மசூதிகளிலேயோ கிறிஸ்தவ தேவாலயங்களிலேயோ, பிற மதத்தார் நுழையக் கூடாது என்ற தடை இருக்கவில்லை; ஆனால், இந்தக் குருவாயூர் இந்து கோவிலில் மட்டும் ஏன் அந்தத் தடை? அப்படித் தடை விதிக்கும் அந்தக் கோவிலுக்கு நான் வரமாட்டேன்," என்று அவர் கூறிவிட்டார் எனத் தெரிகிறது.

கால்நடை அபிவிருத்தி நிலையங்கள்

தமிழ் நாட்டில் 8 மாவட்டங்களில் நிறுவப்படுமாம்

சென்னை, ஜுன் 21— செங்கல்பட்டு, தென் ஆற்காடு, வடஆற்காடு, சேலம், திருச்சி, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி முதலிய 8 மாவட்டங்களுக்கும் ஒவ்வொன்றாக 8 கால் நடை அபிவிருத்தி நிலையங்களை 1957 - 58ம் ஆண்டில் நிறுவ அரசாங்கம் அனுமதித்துள்ளது.

இந்த 8 நிலையங்களுக்குமாக ரூ. 3,20,000 செலவில் 400 - பொலிகாளைகள் வாங்கப்படும். நிலையத் திட்டத்துக்கு முதலீட்டுச் செலவு ரூ. 3,28,000; ஆண்டு தோறும் ஏற்படும் செலவு ரூ. - 1,19,000.

பணம் படைத்தோருக்கே கல்லூரிப் படிப்பா ?

மைசூர், ஜுன் 22— வரும் ஜூலை திங்கள் முதல் கல்லூரிகளில், கல்விக்கான கட்டணங்களை மைசூர் பல்கலைக் கழகம் உயர்த்தியுள்ளதாகத் தெரியவருகிறது; இக்கட்டண உயர்வுபற்றி எல்லாக் கல்லூரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கட்டணங்கள் கால் பங்கு முதல் மூன்றில் ஒரு பங்குவரை உயர்த்தப்பட்டுள்ளது.

இதனால் மைசூர் பல்கலைக் கழகத்திற்கு ரூ. 4 இலட்சம் அதிக வருமானம் கிடைக்கிறதாம்.

இந்திய மாணவர்களுக்கு உபகாரச் சம்பளங்கள்

அளிக்க ரஷ்யா முன்வருகிறது

ரஷ்ய சர்க்கார், 11 இந்திய மாணவர்களுக்கு உபகாரச் சம்பளங்கள் வழங்க முன்வந்துள்ளனர்; அந்த உபகாரச் சம்பளங்கள் 1957—58-ம் ஆண்டில், ஆதார விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகிய பாடங்களில், பட்டப்பிற்கால படிப்பு அல்லது ஆராய்ச்சியை மேற்கொள்வதற்காக வழங்கப்படும்.

மூன்றாண்டு காலத்திற்கு தரப்படும் இந்த ஒவ்வொரு உபகாரச் சம்பளத்தின் மதிப்பும் 630 ரூபிள் (ரூ. 809·52) தங்குமிட வசதியும், மருத்துவ உதவியும் இலவசமாக அளிக்கப்படும்.

'கட்சியை பலப்படுத்த அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்கின்றனர்'

கேரள சர்க்கார்மீது குற்றச்சாட்டு

கேரள கம்யூனிஸ்டு சர்க்கார், மாநில கம்யூனிஸ்டு கட்சியைப் பலப்படுத்திக்கொள்வதற்காகத் தனது அதிகாரத்தையும் பதவியையும் தவறான வழியில் உபயோகிப்பதாக மாநில சட்டசபையில் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது.

பி. சோ. தலைவர் பட்டம் தாணுபிள்ளை, முஸ்லிம் லீக் தலைவர் முகம்மது கோயா, காங்கிரஸ் தலைவர் பி. டி. சாக்கோ ஆகியோர் இந்தக் குற்றச்சாட்டைக் கிளப்பினர்.

கம்யூனிஸ்டுக் கட்சியினரை சட்டத்தை மீறுமாறு சர்க்கார் தூண்டுகிறது என்றும், அதன்படி சர்க்காருக்குச் சொந்தமான நிலங்களை சட்ட விரோதமாகக் கம்யூனிஸ்டுகள் ஆக்கிரமித்துக் கொள்கின்றனர் என்றும், இப்படி ஆக்கிரமித்த பிறகு, 'அவர்களை வெளியேற்றுவதற்கில்லை' என்று சர்க்கார் கூறிவிடுவதாகவும், இந்த முறையில் மாநிலத்தில் சட்டவிரோதமான செயல்களை சர்க்கார் தூண்டிவிடுவதுடன் தனது கட்சியை பலப்படுத்திக்கொள்ளவும் வழிசெய்கிறது என்று பட்டம்தாணு பிள்ளை குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

காங்கிரஸ் தலைவரும் இதே குற்றச்சாட்டினை எழுப்பி, ஒரு சந்தர்ப்பத்தில் சுமார் 5,000 மக்கள் சர்க்காருக்குச் சொந்தமான காடுகளை ஆக்கிரமித்துக்கொண்டதாக சுட்டிக்காட்டி, 'இங்கு ஏதாவது சர்க்கார் இருக்கிறதா?' என்றும் கேட்டார் எனக் கூறப்படுகிறது.

மேலும் சர்க்கார், வழக்காடுபவர்களுக்கு உதவி, பொழுதுபோக்கு முதலியவற்றிற்கென்று கூறி ஒதுக்கியுள்ள ரூ. 12,000 போன்ற பெருந்தொகைகள், கட்சி ஊழியர்களை ஊக்குவிப்பதற்கே பயன்படும் என்றும் கூறியிருக்கிறார்.

இந்தக் குற்றச்சாட்டுகளை எல்லாம், 'ஆதாரமற்றவை' என்று கூறி நிதிமந்திரி அச்சுத மேனன் மறுத்துரைத்திருக்கிறார்.

பசி-பட்டினி-பஞ்சம்!

நேரு ஆட்சியின் அவலட்சணம்

திருவனந்தபுரம், ஜுன் 21— நாடு நமதானால், நாட்டில் தேனும் பாலும் வழிந்தோடும் என்று விடுதலை கீதம் பாடியவர்கள் ஆட்சி பீடமேறி 10 ஆண்டுகள் கழிந்த பின்னரும், ரூ. 2,000 கோடி திட்டத்தில் நாட்டின் உற்பத்தியைப் பெருக்க முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றி ஓராண்டுக் காலம் ஆகிய பின்னரும்கூட, உணவுப் பிரச்சினையில் அரசாங்கம் கவலைக்கிடமான நிலையை உருவாக்கிவிட்டுள்ளது என்பதற்கு, கேரள மாநிலத்திலிருந்து கிடைத்துள்ள கீழ்க்காணும் செய்தி போதிய சான்றாகும்.

"பசி வாட்டுகிறது! பட்டினி கிடக்கிறோம்! இலவசமாக உணவளியுங்கள்! எங்கள் பகுதியை பஞ்சப் பகுதியாக பிரகடனம் செய்யுங்கள்!"

இத்தகைய ஒலி முழக்கங்களுடன் கேரளக் கடற்கரையோரப் பகுதி மக்கள் 'பட்டினி அணி வகுப்பு' நடத்தி, முதலமைச்சரிடம் ஒரு மனு கொடுத்துள்ளனராம்.

தொழிற்கல்லூரிகள்

இதர மாநிலத்தவருக்கு இடம் ஒதுக்கப்படவில்லை

சென்னை, ஜுன் 21— சென்னை சர்க்கார் நடத்தும் தொழிற்கல்லூரிகளில், கேரளம், மற்றும் மைசூர் மாநிலங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு இடம் எதுவும் ஒதுக்கித்தரப்பட வில்லை.

என்ஜினீயரிங் கல்லூரிகளில் இடம் அதிகரிக்கப்பட்டிருந்தாலும் கூட, இந்த மாநில மாணவர்களின் தேவையும் அதிகரித்துக் கொண்டே வருகிறது என்பதால், அப்படி இதர மாநிலக்காரர்களுக்கு இடம் ஒதுக்கித் தருவது இயலாமற்போய்விடுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

தனிப்பட்டவர்களின் கல்லூரிகளில் கூடுமானவரை இதர மாநில மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளுமாறு கேட்கப்பட்டிருக்கிறது என்றும் சர்க்கார் அறிவித்திருக்கிறது.

ரூ. 7 லட்சம் செலவில் 800 ஆதாரப் பள்ளிகளாம்!

1957—58-ம் ஆண்டில் புதிதாக 200 ஆதாரப் பள்ளிகளை நிறுவுவதுடன், இப்போதுள்ள ஆரம்பப் பள்ளிகளில் 600 பள்ளிகளை ஆதாரப் பள்ளிகளாக மாற்றுவது என்றும் ஆந்திர சர்க்கார் முடிவு செய்திருக்கிறதாம்.

சர்க்கார் இதற்காக 7,61,800 ரூபாய் ஒதுக்கியுள்ளனராம்.

சென்னையில் அண்ணா

முனுசாமி நினைவு மன்றம் திறப்புவிழா

24—6—57 திங்கள் மாலை 6-மணிக்கு, சிந்தாதிரிப்பேட்டை பாலகிருஷ்ணப் பிள்ளை தெருவில், தோழர் டி. எஸ். கணேசன் தலைமையில் நடைபெறும்; அதுபோது அண்ணா, அன்பழகன் எம்.எல்.ஏ., ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., சத்தியவாணிமுத்து எம்.எல்.ஏ., ஏ.ஏ. கபாலமூர்த்தி, என். ஜீவரத்தினம், அ. பொ. அரசு எம். சி. ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

சென்னை-சைதை முத்தமிழ் மன்ற செயற்குழு உறுப்பினர்களுக்கு:

23—6—57 மாலை 6-30 மணிக்கு மேற்படி மன்ற செயற்குழுக் கூட்டம் நடைபெறும்: அதுபோது பல முக்கியப் பிரச்சினைகள் குறித்து ஆராயப்படும்.

மதுரை தியாகராயர் படிப்பக 2-ம் ஆண்டுவிழா

23—6—57 மாலை 6-30 மணிக்கு, மேற்படி படிப்பக 2-ம் ஆண்டு விழா, திலகர் திடலில் நடைபெறும்; பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், அவர்களும் தோழர்கள் எஸ். முத்து, பி. அறிவழகன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

இந்தியாவின் நீர்ப்பாசன திட்டங்கள் பாதிக்கப்படுவதற்குக் காரணம்?

சிந்து நதித் தண்ணீர் தகராறுதானா?

சிக்கலான நிலைமைகள் மீண்டும் எழுகிறதா?

புதுடில்லி, ஜுன் 21— இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே சிந்து நதித் தண்ணீர் பங்கீடு சம்பந்தமாக உள்ள தகராறை தீர்க்க மீண்டும் டில்லியில் பேச்சுவார்த்தைகள் நடைபெறுகிறது.

உலகப் பாங்கியின் திட்டப்படி சிந்து, ஜீலம், சினூப் ஆகிய 3 நதிகளின் தண்ணீர் முழுமையும் பாகிஸ்தானுக்கும்; ரவி, பியாஸ், சட்லெஜ் ஆகிய மூன்று நதிகளின் தண்ணீர் முழுமையும் இந்தியாவுக்கும் கிடைக்கும்.

இணைப்புக் கால்வாய்கள் கட்ட பாகிஸ்தானுக்கு இந்தியா ரூ. 170 கோடி கொடுக்க வேண்டும் என்று சமீபத்தில் பாகிஸ்தான் ஏதேன் வற்புறுத்தினர்; ஆனால், டில்லியில் உள்ள தகுதி வாய்ந்த வட்டாரங்கள், இணைப்புக் கால்வாய்கள் கட்டும் செலவு பற்றி உறுதியான மதிப்பீடு எதுவும் தயாரிக்கப்படவில்லை என்றும், ஆனால் ரூ. 60 கோடிக்கு மேல் அதற்கு செலவாகாதென்றும் கருதுகின்றன.

இது சம்பந்தமாக இரு நாடுகளுக்குமிடையே ஒரு நல்ல முடிவு காண்பதற்கு உலக பாங்கி முயற்சித்துவருகிறது.

1954-ல் உலக பாங்கி தெரிவித்த திட்டத்தை இந்தியா ஏற்றுக்கொண்டது; ஆனால் பாகிஸ்தான் இதுவரை கொள்கையளவில்கூட அத்திட்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்று தெரியவருகிறது.

உலக பாங்கியின் திட்டப்படி, சிந்து நதித் தண்ணீரில் 81 சதவிகிதம் பாகிஸ்தானுக்கும் 19 சதவிகிதம் இந்தியாவுக்கும் கிடைக்கும்.

இந்தக் கால்வாய் தகராறு முடிவு பெறாத காரணத்தினால் இந்தியாவின் நீர்ப்பாசனத் திட்டங்களும் உணவு நிலையும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

தனக்கு ஒதுக்கப்பட்டுள்ள தண்ணீரிலிருந்து 50 இலட்சம் ஏக்கர் அடி தண்ணீரை பாகிஸ்தானுக்கு இந்தியா கொடுத்துவருகிறதாம்; இதனால், அந்நிய நாணயச் செலாவணி நெருக்கடி ஏற்பட்டதுடன், உணவுத் தானியங்களை இறக்குமதி செய்யவேண்டிய நிலையும் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ளதாம்.

எதிர்க்கட்சிகளா நாசமாகும்?

நிலைமையை உணராத பிரதமரின் நாவடக்கமற்ற பேச்சு

கேப்டவுன், ஜுன் 21— நிறவேற்றுமை சட்டத்தை அமுல் செய்யும் வரை அரசாங்கம் பதவியில் இருந்தே தீரும் என்றும், இந்தக் கொள்கையை எதிர்க் கட்சிகள் எதிர்த்து நாசமாக விரும்பினால் தாராளமாகச் செய்யலாம் என்றும் தென்னாப்பிரிக்கப் பிரதமர் ஸ்ட்ரீடம் கூறியுள்ளார்.

கோலார் தங்கச் சுரங்க அபிவிருத்தி

ரூ. 30 கோடி செலவிடப்படுமாம்

பெங்களூர், ஜுன் 19— இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் கோலார் தங்க வயல் அபிவிருத்திக்காக ரூ. 30 கோடி செலவிட மைசூர் அரசாங்கம் முடிவு செய்துள்ளதாக என்று நிதி அமைச்சர் மாரியப்பா மைசூர் சட்ட சபையில் தெரிவித்துள்ளார்.

கிராமங்களில் கூட்டுறவுப் பண்ணைகளின் அவசியம்

சென்னை, ஜுன் 19— சென்னை மாநிலத்தில் மொத்தம் நான்கு கூட்டுறவுப் பண்ணைகள் உள்ளனவாம்.

கூட்டுறவுப் பண்ணை முறையின் நன்மைகளை குடியானவர்களுக்கும் கிராம மக்களுக்கும் தெரியப்படுத்தும் நோக்கத்துடன் தமிழில் துண்டுப் பிரசுரங்கள் வெளியிட சென்னை கூட்டுறவு இலாகா முடிவு செய்துள்ளதாம்.

கழகக் கூட்டங்கள்

★

தென்கச்சிப்பெருமாள்நத்தம்:
(தஞ்சை மாவட்டம்)
24—6—57 மாலை 5 மணிக்கு
தி. மு. கழகத் துவக்க விழா
தெற்கு தெரு
தலைவர்: டி. கே. நடராசன்
பேசுவோர்:
எஸ். நெடுமாறன்
எஸ். இராமசாமி
எஸ். ஆர். இராதா
அயூப்கான்

★

பாண்டியூர்:
(இராமநாதபுரம் மாவட்டம்)
அண்ணா திடலில்
24—6—57-ல்
தலைவர்: இரா. நடராசன்
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
எஸ். முத்து
இன்னிசை:
பி. எஸ். செல்வா குழுவினர்

★

வெண்ணந்தூர்:
(சேலம் மாவட்டம்)
25—6—57 மாலை 6 மணிக்கு
தலைவர்: பி. எம். சுப்பிரமணியம்
பேசுபவர்:
என். வி. நடராசன்
(அன்று காலை 10-மணிக்கு அலவாய்ப்பட்டி தி. மு. க. கிளை துவக்க விழாவிலும், மாலை 3-மணிக்கு நாச்சிப்பட்டி தி. மு. க. கிளை துவக்க விழாவிலும் தோழர் என். வி. நடராசன் அவர்கள் கலந்துகொள்வார்.

சென்னை—பெரம்பூர் அறிவு வளர்ச்சி மன்றம் 4-ம் ஆண்டுவிழா

23—6—57 மாலை 6-மணிக்கு மேற்படி ஆண்டுவிழா பெரம்பூர் எரி மைதானத்தில், தோழர் சி. ஆர். பாலசுந்தரம் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் சி. பி. சிற்றரசு, வி. எஸ். கோவிந்தராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

சென்னை—கோடம்பாக்கம் தி. மு. க. செயற்குழு உறுப்பினர்களுக்கு:

23—6—57 காலை 8-மணிக்கு கழகப் பணிமனையில் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது ஆண்டுவிழா, கழக ஆக்க வேலைகள், வரவு—செலவு முதலியவை பரிசிலனைக்கு வரும்.

வண்ணை தமிழ் இளைஞர் கழகம்

23—6—57 காலை 10-மணிக்கு வண்ணையம்பதி தனலட்சுமி உயர்தர ஆரம்பப் பள்ளியில் திரு. தி. இராசகோபாலன் அவர்கள் திருக்குறளில் 'தவம்' என்ற அதிகாரத்தைக் குறித்து சொற்பொழிவாற்றுவார்.

கே. வி கே. சாமி படிப்பகம் இரவுப் பள்ளி திறப்புவிழா

23—6—57 மாலை 5-மணிக்கு சென்னை—ஜுலை கலியாண மேஸ்திரி தோட்டத்தில் (திரு. வி. க. திடல் எதிரில்) கே. வி. கே. சாமி படிப்பகம் — அதன் அமைப்பில் உள்ள இரவுப் பள்ளி ஆகியவற்றின் திறப்புவிழா நடைபெறும்.

சென்னை கல்விச் சங்கம்

23—6—57 மாலை 5-மணிக்கு மேற்படி சங்கத்தின் ஆதரவில் சென்னை — பட்டாளம் ஸ்டிரன்ஸ் ரோடு ஆண் பள்ளியில் திரு. த. வே. முருகேசன் அவர்கள் தலைமையில், 'அரண்' எனும் பொருள்பற்றி திரு. க. வீ. குருசாமி அவர்கள் உரை நிகழ்த்துவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா நெடுஞ்செழியன் எம்.ஏ.